# இயல்-1

## முன்னுரை

இந்திய அரசியலமைப்பின் 73-வது திருத்தச் சட்டத்திற்கு இணங்க 1994ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் உருவாக்கப்பட்டது, அதன்படி மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகள் அமைக்கப்பட்டு, அவ்வமைப்புகளான ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகள் ஆகியவற்றிற்கு 1996ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் தேர்தல்கள் நடைபெற்றன. தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் 1996ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 25ஆம் நாள் அன்று தங்களது பொறுப்புகளை ஏற்றுக் கொண்டு உள்ளாட்சி அமைப்புகளை நிர்வகித்து வருகின்றனர்.

1.2. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் பிரிவு கூறு 243-ஜி மற்றும் 1994ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் பிரிவு 257-ற்கிணங்க பொருளாதார மேம்பாடு மற்றும் சமூக நீதிக்கான திட்டங்களை தீட்டி செயல்படுத்தவும் மற்றும் அச்சட்டத்தின் பட்டியல் IV-ல் கண்டுள்ள இனங்களை செயல்படுத்தவும் தேவையான பொறுப்புகளை ஊராட்சி அமைப்புகளுக்கு வழங்கலாமாவென்பது குறித்து பரிந்துரைத்து அரசுக்கு அறிக்கையையொன்றை சமர்ப்பிக்குமாறு மாநில திட்டக்குழு கேட்டுக் கொள்ளப்பட்டது. அவ்வாறே மாநில திட்டக்குழு இரண்டு அறிக்கைகளை அனுப்பியது. இவ்வறிக்கைகளை பிற துறைகளுடன் கலந்து ஆராய்ந்து அரசு ஆணைகள் வாயிலாக முதல் கட்டமாக மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு அதிகாரங்கள், உரிமைகள் மற்றும் பொறுப்புகள் ஒப்படைப்பு செய்துள்ளது.

1.3 உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிக அதிகாரங்கள், பொறுப்புகள் மற்றும் பணிகள் வழங்குவது குறித்து 1997-98ஆம் ஆண்டு சட்டசபையில் நிதிநிலை அறிக்கை விவாதத்தின் போது மூன்றடுக்கு ஊராட்சிகளுக்கு, கூடுதல் அதிகாரங்கள், உரிமைகள் மற்றும் பொறுப்புகள் வழங்க வேண்டுமென்று சட்டமன்றப் பேரவையில் சட்டமன்ற உறுப்பினர்கள் கோரிக்கைகள் விடுத்தனர். சட்டமன்ற உறுப்பினர்களின் கோரிக்கையினை ஏற்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் கீழ்கண்டவாறு சட்டமன்றப் பேரவையில் அறிவித்தார்:-

"மாநிலத் திட்டக் குழுவின் பரிந்துரைகளை ஏற்று மாவட்ட ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் மற்றும் ஊராட்சிகளுக்கு இதுவரை வழங்கியுள்ள அதிகாரங்கள், பொறுப்புகள் மற்றும் பல்வேறு திட்டங்களை கண்காணிக்கும் பணிகள் ஆகியவற்றை ஒவ்வொரு மாவட்டத்திலும் ஆய்வு செய்து மேலும் எத்தகைய மாற்றங்களை செய்யலாம், எத்தகைய உரிமைகளையும், பொறுப்புகளையும், அதிகாரங்களையும் அளிக்கலாம் என்பது பற்றி பரிந்துரை செய்ய சட்டப்பேரவையில் உள்ள கட்சி பிரதிதிகளை அமைச்சர், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அவர்களை அமைப்பாளாரகக் கொண்டு குழு ஒன்று அமைக்கப்படும். இக்குழுவில் ஆளுங்கட்சி சார்பிலும், பிராதான எதிர்கட்சி சார்பிலும் முறையே இரண்டு உறுப்பினர்களும் மற்ற கட்சிகளின் சார்பில் ஒவ்வொரு உறுப்பினரும் நியமிக்கப்படுவர்."

1.4 மாண்புமிகு முதல்வர் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு.கோ.சி.மணி அவர்களை அமைப்பாளராகக் கொண்டு சட்டமன்ற கட்சிகளின் 12 பிரதிநிதிகளைக் கொண்ட உயர்மட்டகுழு ஒன்று அமைக்கப்பட்டது. ( இணைப்பு 1.1) . இந்த உயர்மட்ட குழுவில் பிரதிநித்துவம் வகிக்காத சட்டமன்ற கட்சிகளிலிருந்து வரப்பெற்ற கோரிக்கைகளின் பேரில் உறுப்பினர்களாக மேலும் இரண்டு உறுப்பினர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டு ஆணை வெளியிடப்பட்டது. (இணைப்பு 1.2)

இக்குழுவில் அங்கம் வகிக்கும் அமைப்பாளர் மற்றும் 14 **உறுப்பினர்களின் பெயர்** மற்றும் அவர்கள் சார்ந்துள்ள கட்சியின் விவரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது:-

1. மாண்புமிகு திரு.கோசி.மணி, – அமைப்பாளர்
   ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்

2.திரு.பெ.சு.திருவேங்கடம், சட்டமன்ற உறுப்பினர் தி.மு.க. – உறுப்பினர்

3.திரு.பரமத்தி சண்முகம் தி.மு.க. – உறுப்பினர்

4.திரு.கே.எஸ்.அழகிரி, சட்டமன்ற உறுப்பினர் த.மா.கா. – உறுப்பினர்

5.திரு.என்.ஆர்.அழகராஜா, சட்டமன்ற உறுப்பினர் த.மா.கா. – உறுப்பினர்

6.திரு.எம்.அப்துல் லத்தீப், சட்டமன்ற உறுப்பினர் இ.தே.லீக்.– உறுப்பினர்

7.திரு.சொ.கருப்பசாமி, சட்டமன்ற உறுப்பினர் அ.இ.அ.தி.மு.க– உறுப்பினர்

8.திரு.ஏ.இராசேந்திரன் (எ) தீரன், சட்டமன்ற உறுப்பினர் – உறுப்பினர்

9.திரு.இலா.சந்தானம், சட்டமன்ற உறுப்பினர். அ.இ.பா.பிளாக்– உறுப்பினர்

10. திரு.ஐ.கணேசன், சட்டமன்ற உறுப்பினர் பா.ம.க. - உறுப்பினர்

11. டாக்டர் கே.கிருஷ்ணசாமி,சட்டமன்ற உறுப்பினர், புதிய தமிழகம் - உறுப்பினர்

12.திரு.ஜி.இராமகிருஷ்ணன் இ.க.(மார்க்சிஸ்ட்) - உறுப்பினர்

13.திரு.ஏ.எம்.கோபு இந்திய கம்யூனிஸ்ட் - உறுப்பினர்

14.திரு.பி.அய்யாக்கண்ணு ஜனதாதளம் - உறுப்பினர்

15.டாக்டர் வா.மைத்ரேயன் பா.ஜ.க. - உறுப்பினர்

1.5 உயர்மட்டக் குழு தனது அறிக்கையினை 6 மாத காலத்திற்குள் (11.5.98) அரசிற்கு அறிக்கை தருமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது. குழு பல்வேறு பொருட்கள் குறித்து விவாதித்து முடிவு எடுக்க வேண்டியிருந்ததால் குழுவின் பதவி காலம் மேலும் ஆறு மாதத்திற்கு நீட்டிக்கப்பட்டது, அதாவது 10.11.98 வரை நீட்டிக்கப்பட்டது(இணைப்பு 1.3). குழுவின் அறிக்கை முழுமை பெறாததாலும் குழு தனது அறிக்கையை அரசுக்கு சமர்ப்பிக்க வேண்டி மேலும் இரண்டு திங்கள்களுக்கு மறு நீட்டிப்பு அதாவது 10.1.99 வரை குழுவின் கால அளவு நீடிக்கப்பட்டது. (இணைப்பு 1.4)

1.6 குழு அமைக்கப்பட்ட நாளிலிருந்து மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் குழுவின் கூட்டங்கள் ஏழு முறை கூட்டப்பட்டு உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிகாரங்கள், பொறுப்புகள் மற்றும் பணிகள் குறித்து விவாதம் செய்யப்பட்டது. கூட்டம் நடைபெற்ற நாள், இடம் மற்றும் விவாதத்தின் விவரங்கள் பின்வருமாறு:

| வ என் | நாள் | இடம் | கூட்டத்தில் விவாதிக்கப்பட்ட பொருள்கள் |
|---|---|---|---|
| 1. | 28.11.97 | தலைமைச் செயலக வளாகம் | உறுப்பினர்கள் அறிமுகம், குழுவின் நோக்கம் மற்றும் கால அளவு குறித்து குழுவின் அமைப்பாளர் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் எடுத்துரைக்கப்பட்டது. |
| 2. | 7.4.98 | தலைமைச் செயலக வளாகம் | 1994ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டம் பட்டியல் IV-ல் கண்டுள்ள முதல் 5 இனங்களின் மீதான மாநிலத் திட்டக்குழுவின் பரிந்துரைகளை உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்குவது குறித்து விவாதிக்கப்பட்டது. |
| 3. | 28.4.98 | தலைமைச் செயலக வளாகம் | 1994ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டம் பட்டியல் IV-ல் கண்டுள்ள இனங்களின் மீதான மாநிலத் திட்டக்குழுவின் பரிந்துரைகளை உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்குவது குறித்து விவாதிக்கப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| 4. | 15.6.98 | தலைமைச் செயலக வளாகம் | 1994ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டம் பட்டியல் IV-ல் கண்டுள்ள இனங்களில் 6 முதல் 10 வரையிலான மாநிலத் திட்டக் குழுவின் பரிந்துரைகளை உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்குவது குறித்து விவாதிக்கப்பட்டது. |
| 5. | 28.7.98 மற்றும் 29.7.98 | தலைமைச் செயலக வளாகம் | 1994ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டம் பட்டியல் IV-ல் கண்டுள்ள இனங்களில் 11 முதல் 29 வரையிலான மாநிலத் திட்டக் குழுவின் பரிந்துரைகளை உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்குவது குறித்து விவாதிக்கப்பட்டது. |
| 6. | 19.9.98 மற்றும் 20.9.98 | கன்னியாகுமரி | ஊராட்சி அமைப்புகளுக்கு வழங்கப்பட வேண்டிய பொதுப் பொருள்கள் குறித்து மாநிலத் திட்டக் குழுவின் பரிந்துரைகள் மற்றும் உறுப்பினர்களின் கருத்துக்கள் விவாதிக்கப்பட்டது. |
| 7. | 29.12.98 மற்றும் 30.12.98 | ஒக்கேனக்கல் தருமபுரி மாவட்டம் | வரைவு அறிக்கையினை விவாதித்து சில திருத்தங்களுடன் அறிக்கையினை இறுதி செய்து ஒப்புதல் அளித்தது. |

மேற்கண்ட நாள்களில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கை குறிப்புகளை இணைப்பு 2.1 முதல் 2.7-ல் காணலாம்.

# மாநில திட்டக்குழுவின் பரிந்துரைகளின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

1.7 மாநில திட்டக் குழு தனது அறிக்கையில் இந்திய அரசியலமைப்புச் சட்டம் பிரிவு கூறு 243 ஜி (பதினோறாவது அட்டவணை) மற்றும் 1994-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், பட்டியல் IV-ல் கண்டுள்ள 29 இனங்களை (இணைப்பு 3) செயல்படுத்த தேவையான குறிப்பு மற்றும் உரிமைகளை ஊராட்சிகளுக்கு வழங்க வேண்டுமென்று பரிந்துரை செய்தது. இந்த பரிந்துரைகளை பிற துறைகளுடன் ஆய்வு செய்து முதல் கட்டமாக வேளாண்மை மற்றும் வேளாண்மை விரிவுபடுத்துதல், நிலச்சீர்திருத்தம், நில உச்சவரம்பு செயல்படுத்துதல், கால்நடை, பால்பண்ணை மற்றும் கோழிப்பண்ணை, மீன்வளம், சிறுதொழில்கள், கதர், கிராம மற்றும் குடிசைத் தொழில்கள், ஊரக வீட்டுவசதி, குடிநீர்வசதி, எரிபொருள் மற்றும் மாட்டுத்தீவனம், மரபுசாரா எரிசக்தி ஆதாரங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், கல்வி, தொடக்கக் கல்வி மற்றும் ஆரம்பக் கல்வி, தொழில்நுட்பப் பயிற்சி மற்றும் வாழ்க்கை தொழில் கல்வி, முதியோர் கல்வி மற்றும் முறைசாரா கல்வி, நூலகங்கள், சந்தைகள் மற்றும் கண்காட்சிகள், மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், மருந்தகங்கள் உள்ளிட்ட சுகாதார நலன்கள். குடும்ப நலம், பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாடு, மனவளர்ச்சி குன்றியோர் மற்றும் ஊனமுற்றோர் உள்ளிட்ட சமூகப் பாதுகாப்புத் திட்டம், பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினரின் நலிந்தோர் நலன், பொதுவிநியோக முறை, சமுதாய சொத்துக்கள் பேணுதல் ஆகியவற்றின் மீது அரசு ஆணைகள் எற்கனவே வெளியிடப்பட்டுள்ளன. இந்த ஆணைகளை தொகுத்து புத்தக வடிவில் 1998-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் சட்டமன்ற பேரவையில் உறுப்பினர்களின் தகவலுக்காக மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது. இந்த ஆணைகளின் சுருக்கம் இணைப்பு 4-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

1.8 நீண்ட இடைவெளிக்குப் பிறகு ஊராட்சி அமைப்புகளுக்கு 1996ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் முறையான தேர்தல்கள் நடைபெற்றது. தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் 1996ஆம் ஆண்டு அக்டோபர் 25 ஆம் நாள் முதல் உள்ளாட்சி அமைப்புகளை நிர்வகித்து வருகின்றனர். உள்ளாட்சி

அமைப்புகள் தங்கள் பணிகள் மற்றும் அதிகார அலுவல்களை செவ்வனே செய்வதற்கு ஏதுவாக உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிகாரங்கள், உரிமைகள் மற்றும் பொறுப்புகள் அரசு ஆணைகளின் மூலமாக ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் 1994ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் பிரிவுகள் 110, 111, 112 மற்றும் 163ல் கிராம ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் மற்றும் மாவட்ட ஊராட்சிகளின் பணியமைப்பு மற்றும் அவற்றின் அதிகார அலுவல்கள் செவ்வனே நெறிமுறை படுத்தப்பட்டுள்ளன.

1.9 உள்ளாட்சி அமைப்புகள் மேலும் திறம்பட செயல்பட அவ்வப்போது தமிழ்நாடு 1994ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்திற்கு உரிய சட்டத் திருத்தங்களை செய்து உள்ளது. புதிய அரசு போறுப்பேற்ற பின்பு 1996ல் ஒரு முறையும், 1997ஆம் ஆண்டில் 5 முறைகளும் மற்றும் 1998ஆம் ஆண்டில் 7 முறைகளுமாக மொத்தம் பதிமூன்று சட்டத்திருத்தங்களால் நாற்பதுக்கு மேற்பட்ட பிரிவுகளுக்கு திருத்தம் செய்யப்பட்டுள்ளது. இவைகள் அனைத்தும் ஊரக உள்ளாட்சி அமைப்புகள் எவ்வித இடையூருமின்றி முழு அதிகாரம் பெற்ற சுயாட்சி அமைப்புகளாக செயலாற்ற உரிய வகையில் செய்யப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது. குறிப்பாக, மாவட்ட திட்டக்குழு அமைத்தல், கிராம ஊராட்சிகளுக்கு குடிநீர் பராமரிப்பை அடிப்படை பணியாக ஏற்படுத்துதல், கிராம சபைக்கு கூடுதல் அதிகாரம் மற்றும் குறைந்த பட்ச வருகையை திருத்தி அமைத்தல், கிராம ஊராடசிகளை தரம் பிரிப்பதற்கு வகை செய்தல், தொழில் வரி விதித்தல் போன்ற பொருள்கள் இச்சட்டத் திருத்தங்களில் அடங்கும்.